சமூக வலைதளத்தில் தி.மு.க. மீது அவதூறு பரப்பும் வகையில் பேசி வரும் இன்ஸ்டாகிராம், இன்ப்ளூயன்ஸர்கள் மீது புகார்!

போலி சமூக வலைதளக் கணக்குகள் மூலம் தி.மு.க. குறித்து பொய்ப் பிரச்சாரம் செய்வோர் மீது கடும் சட்ட நடவடிக்கை!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ கூட்டாக அளித்த பேட்டியில் எச்சரிக்கை!

சென்னை, மே 27–

சமூக வலைதளத்தில் தி.மு.க. மீது அவதூறு பரப்பும் வகையில் பேசி வரும் இன்ஸ்டாகிராம் இன்ப்ளூயன்ஸர்கள் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது குறித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் மாலை, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

இதில் ஆர்.எஸ்.பாரதி குறிப்பிட்டதாவது :-

தமிழ்நாட்டில் புதிய ஆட்சி அமைந்து ஏறத்தாழ 3 வாரங்கள் ஆகின்றது. அவருடைய ஆட்சியில் பல்வேறு குற்றங்கள் ஏறத்தாழ 40-க்கும் மேற்பட்ட கொலைகள் கற்பழிப்புகள் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதை அனைவரும் நன்றாக அறிவீர்கள். ஆனால் இதையெல்லாம் திசை திருப்பும் வகையில் எப்படி இன்ஸ்டாகிராம் மூலமாகவும் சமூக வலைதளம் மூலமாகவும் ஆட்சிக்கு வந்தார்களோ அதே முறையில் இந்தச் சம்பவங்கள், இந்த நிகழ்வுகள் நடந்து கொண்டிருப்பது தொடர்பாக தமிழ்நாடு பூராவும் மக்கள் கொதித்து எழுந்துள்ளார்கள் .

தவறாகப் பயன்படுத்தப்படும் சமூக வலைதளங்கள்!

இதைத் திசை திருப்புவதற்காக சமூக வலைதளங்களைத் தவறாகப் பயன்படுத்தி எப்படி ஆட்சிக்கு வந்தார்களோ அதன் மூலமாகவே மீண்டும் அதே பாணியில் பொய் பிரச்சாரத்தை செய்து கொண்டு வருகிறார்கள், கோவையில் சிறுமி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை திசை திருப்பவும் வகையில் ஒரு பெண் சமூக வலைதளத்தில் பேட்டி அளித்து வைரலாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதிலே எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பற்றியும், திமுகவை பற்றியும் அவதூறாக தவறாக அவருடைய பெயரில் வெளியிடாமல் இன்னொருத்தர் ஐடி மூலமாக வெளியிட்டுள்ளார். இதுபோன்று இதுவரையில் தமிழ்நாட்டில் எந்த ஒரு நிலையிலும் அசிங்கங்கள் நடந்தது கிடையாது. இப்போது ஒவ்வொன்றாக அரங்கேறிக் கொண்டிருக்கிறது. அதை எல்லாம் திமுக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது .

அவர்கள் பயன்படுத்திய சமூக வலைதளப் பக்கங்களுக்கு அடிமையானவர்கள் தான் வாக்களித்தார்கள் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது, இனியும் இது தொடரக்கூடாது, இதைக் கண்டித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவெடுத்து பேட்டி அளித்த பெண் மீது திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் புகார் அளித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

அவதூறான பொய்ப் பிரச்சாரத்தைச் செய்தால், பொதுவாக அவதூறு செய்தால் இரண்டு ஆண்டுதான் தண்டனை கிடைக்கும், இது போன்று தவறான ஐடியை பயன்படுத்தி தவறான தகவல்களை அவதூறாக பேசினால் அதற்கு தண்டனை ஆயுள் தண்டனை ஆகும்.

எனவே இதுகுறித்து தெளிவுபடுத்த காரணம் என்னவென்றால் தமிழ்நாட்டு மக்கள் எங்களுடைய மக்கள் தமிழ்நாட்டின் மீது திமுகவிற்கு அக்கறை இருக்கிற காரணத்தினால் ஏதோ ஒரு தவறு நடந்து விட்டது எல்லோரும் சொன்னதைப் போல குழந்தைகள் சிறார்கள் தாய் தந்தையை வலியுறுத்தி தாத்தா பாட்டிகளை வலியுறுத்தி வாக்குகளை விஜய் கட்சி பெற்றுள்ளது எல்லா தரப்பும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒன்று.

இது போன்ற தவறுகளை தங்கள் பிள்ளைகள் செய்து விடக்கூடாது - தாய் தந்தையர்கள் இதை குழந்தைகளுக்குச் சொல்லி வளர்க்க வேண்டும். இது போன்று சமூக வலைதளத்தில் செயல்பட்டு பாதிக்கப்படுபவர்கள் ஆயுள் தண்டனை கிடைத்துவிட்டால் அவர்களுக்கு வாழ்க்கை நாசமாகிவிடும். திமுக அதை விரும்பாத காரணத்தினால் வெளிப்படையாக சொல்லிவிட்டு செய்கிறோம். அப்படி காரியத்தில் ஈடுபடுபவர்கள், நண்பர்கள், உறவினர்களை எச்சரிக்கை செய்து இது போன்ற பொய் பிரச்சாரத்தை செய்யாதீர்கள் இதனால் வாழ்க்கை அழிந்து விடும், தண்டனை கிடைத்தால் ஆயுள் தண்டனை என்பதை உணர்ந்து அவர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் பெற்றோர்களும் மற்றவர்களும் குறிப்பாக கட்சித் தலைவர்கள் சொல்ல வேண்டும்.

தூண்டி விடுபவர்களும் குற்றத்துக்கு உட்பட்டவர்கள்!

யார் தூண்டி விடுகிறார்களோ அவர்களும் குற்றத்திற்கு உட்பட்டவர்கள். அவர்கள் மீதான சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதை சட்டத்துறை செயலாளர் தெரிவிப்பார்.

இவ்வாறு அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி குறிப்பிட்டார்.

என்.ஆர்.இளங்கோ பேட்டி!

மேலும் இதுகுறித்து சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ கூறியதாவது :-

கோவையில் நடைபெற்ற சிறுமியின் கொடூரமான கொலை குறித்து அதனுடைய பதிவுகள் தொடர்பாக அறியாதவர்கள் அனைவரும் மனதையும் புண்படுத்தும் விதமாக குறிப்பாக திமுக தான் இதற்கு காரணம் என்று அரசியலில் இருப்பவர்களுடைய மீது வெறுப்பு வருவதற்காக இது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று ஒரு பொய்யான தகவலைப் பதிவிட்டு அது சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டு வருகிறது.

அவதூறு வழக்குகள் தனிப்பட்ட புகாராக கொடுக்கப்பட்டு அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் தண்டனை கிடைக்கும். ஆனால் இப்போது இது போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்கள் ஒருவேளை தகவல் தொழில்நுட்ப சட்டம் பிரிவு 66 F என்பது குறித்து தெரியாமல் இருக்க வேண்டும் அல்லது அது குறித்தான புரிதல் இல்லாமல் இருக்க வேண்டும். எனவே தான் அவர்கள் தங்களை அறியாமல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருவர் தன்னுடைய அடையாளத்தை மறைத்து வேறொருவருடைய அடையாளத்தில் கம்ப்யூட்டர் நெட்வொர்க் மூலமாக சமூக வலைதளத்தில் அவதூறு பரப்பினால் அதற்கான தண்டனை ஆயுள் தண்டனை வரை செல்லலாம் என சட்டம் உள்ளது. எங்களுக்கு

அடுத்தவர்களை தண்டிக்க வேண்டிய நோக்கம் அல்ல. ஆனால் இப்படியே விட்டுச் சென்றால் இதற்கு ஒரு எல்லை இல்லாமல் போகும். அவதூறுகளுக்கு ஒரு தடையில்லாமல் போகும் என்பதனால் கழகத் தலைவர் வழிகாட்டுதல் அடிப்படையில் இன்றைக்கு இந்த நிகழ்வுகள் குறித்து தமிழ்நாடு டிஜிபி இடமும் சென்னை காவல்துறை ஆணையரிடமும் தனித்தனி புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதள நிறுவனங்களிடம் புகார்!

அதில் எந்தெந்த சட்ட விதிகளை மீறி உள்ளார்கள் என்பதை தெளிவாக குறிப்பிட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் குறைதீர்ப்பு குழுவிற்கு ஈமெயில் மூலமாக புகார் அளித்துள்ளோம் எக்ஸ் தளம் மற்றும் மெட்டா தளம் உள்ளிட்ட சமூக வலைதள நிறுவனங்களுக்கும் புகார் அளித்துள்ளோம்.

விதிகளின்படி சம்பந்தப்பட்ட சமூக வலைதளங்கள் நிறுவனங்கள் தொடர்புடைய பதிவுகளை நீக்கி சமூக வலைதளக்கணக்குகளை முடக்கவும் புகார் அளித்துள்ளோம். எங்களுடைய ஒரே ஒரு வேண்டுகோள் நாங்கள் சமூக வலைதளத்தில் குழந்தைகளை வைத்து அரசியல் பேசுவது, அதை பெற்றவர்களே படம்பிடிப்பது, சமூக வலைதளத்தில் பரப்புவது, சிறார் சட்டத்திற்கு எதிரான தாகும். இதுபோன்ற போலி செய்திகளை சமூக வலைதளத்தில் மார்பிங் செய்து வீடியோ போடுகிறார்கள். அது மிகப்பெரிய குற்றமாக தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் பார்க்கப்படுகிறது. நாங்கள் புகார் அளித்துள்ளோம். நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் உரிய நீதிமன்றத்தை நாடுவோம். தேவையென்றால் எங்கெங்கு தேவையோ அத்தனை இடத்திலும் தனிப் புகாராக அளிப்போம். புகார் அளித்தால் நடவடிக்கை எடுக்காமல் விடமாட்டோம்.

எனவே இனிமேல் தவறாக பொய்யான செய்திகளை பரப்புபவர்கள் மீது இது முதலாவதாக கொடுக்கும் வேண்டுகோளாக எடுத்துக்கொள்ள வேண்டும். தயவுசெய்து அரசியல் ரீதியாக எந்தக் கருத்தையும் பதிவிடுங்கள். பதிலளிக்க தயாராக இருக்கிறோம். கடமைப்பட்டுள்ளோம். பொய்யான செய்திகளை, அவதூறான செய்திகளை, எந்த அடிப்படை ஆதாரமும் இல்லாத செய்திகளை இதுபோன்று பரப்பிட வேண்டாம், மக்களை திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து - உண்மையை கூறும் சமூக வலைதளப் பக்கங்களையும் சில நிறுவனங்கள் முடக்குவதாக கேட்கப்பட்ட கேள்விக்கு அளித்த பதில் வருமாறு :-

அவதூறு பரப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்ற வேளையில் உண்மையை சொல்லக்கூடிய இந்த அரசுக்கு எதிராக உண்மையை வெளிக்கொண்டு வரக்கூடிய யாருக்கும் சட்ட ரீதியாக அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் என்று கழகத் தலைவர் சொல்லியுள்ளார்கள்.

கழக வழக்கறிஞர் அணி உதவிடும்!

இப்படி சட்டவிரோதமாக, கணக்குகள் முடக்கப்படுமேயானால் அல்லது பொய் புகார்கள் காவல்துறை மூலம் தேவையில்லாத நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதற்கும் திமுக வழக்கறிஞர் அணி உதவிடும் என்று தலைவர் கூறியுள்ளார். அவர்களுக்கும் பாதுகாப்பாக இருப்போம்.

எழுத்தறிவு, பேச்சுரிமையை என்றும் பாதுகாக்க திமுக போராடும் என அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி குறிப்பிட்டுப் பேசினார். அதே வகையில் யாருடைய உரிமைகள் பாதிக்கப்பட்டாலும் பாதுகாக்கும் கேடயமாக தி.மு.க. செயல்படும்.

மாணிக்கம் தாகூருக்குப் பதில்!

காங்கிரஸ் மாணிக்கம் தாகூர் கூறிய கருத்திற்கு அளித்த பதில் வருமாறு :

அவர்தான் சூத்திரதாரியே, ஒரு தேர்தலில் நின்று ஜெயித்து வெற்றி பெற்று குறிப்பாக பழமொழி ஒன்று சொல்வார்கள், அதுபோல தேர்தல் முடிவு வருவதற்குள்ளாக தமிழக வெற்றிக் கழகத்துடன் சேர்ந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர். மற்ற தலைவர்கள் எல்லாம் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு தலைவரிடம் நன்றி சொல்லிவிட்டுப் போனார்கள். காங்கிரஸ்காரர்கள் நன்றிகூட சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. முடிவு வந்தவுடன் தமிழக வெற்றிக்கழகத்தில் ஆதரவு தெரிவிக்கிறேன் என்று சொன்னார்கள். காரணம் 59 வருடமாக ஆட்சியில் மந்திரிப் பதவி தமிழகத்தில் கிடைக்கவில்லை.

காங்கிரஸ் தொண்டர்களின் புலம்பல்!

காணாததைக் கண்டால் கண்டதை சொர்க்கம் என்று சொல்வார்கள். அதே போல் மந்திரி பதவி கிடைப்பதால் போய் சேர்ந்து விட்டார்கள். அதை மூடி மறைப்பதற்கு எங்கள் மேல் பழி போடுகிறார்கள். எங்கள் தலைவர் தெளிவாக சொல்லி உள்ளார், இந்த ஆட்சிக்கு எந்த விதமான இடையூறும் செய்ய மாட்டோம். யார் வந்தாலும் போனாலும் சரி, கவலை இல்லை. ஆனால் காங்கிரஸ் செய்தது பச்சை துரோகம் என்று அந்த கட்சி தொண்டர்களை புலம்புகிறார்கள்.

யாரோ இருவர் பதவி பெற்றதற்காக காங்கிரஸ் பாரம்பரியத்தைக் கெடுத்து விட்டார்கள் என கட்சியின் உள்ளே பேசுகிறார்கள் பல இடத்தில் காங்கிரஸ்காரர்கள் கூப்பிட்டும் போகவில்லை ஆகவே மாணிக்கம் தாகூர் தன்னை பெரிய மனிதராக காட்டிக் கொள்வதற்காக இப்படிப்பட்ட அறிக்கைகளை விடுகிறார். அவர் எப்படி வெற்றி பெற்றார் என்பதை முதலில் நினைத்துப் பார்க்க வேண்டும்.

விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினராக எப்படி வந்தார், எப்படி ஜெயித்தார், யார் தயவில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அ.தி. மு.க.வைச் சார்ந்த மூன்று எம். எல்.ஏ.க்கள் பதவி ராஜினாமா செய்துள்ளார்கள். அவர்களுக்கு இருக்கும் சொரணையில் கொஞ்சமாவது மாணிக்கம் தாகூருக்கு இருந்தால் அவரும் ராஜினாமா செய்ய வேண்டும்.

இடைத்தேர்தல்கள் வரப்போகிறது. ராஜினாமா பண்ணிட்டு தேர்தலில் நிற்க வேண்டியது தானே. காங்கிரஸ் கட்சி பதவி கிடைப்பதற்காக போய்விட்டது, கவலை கிடையாது எத்தனையோ மேடு பள்ளங்களை திமுக பார்த்துள்ளது. இது நிரந்தரமாக தோல்வி அல்ல. இன்னும் சொல்லப்போனால் இன்னும் தோற்கவில்லை. நிலையான ஆட்சியும் இந்த ஆட்சி கொடுக்கவில்லை, இதுவரை இல்லாத அளவு 34 சதவீத ஆதரவு 66 சதவிகிதம் எதிராக இருக்கிறது இதெல்லாம் புரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு பேசக்கூடாது.

“தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இது போன்ற விவகாரத்தில் சைபர் கிரைம் மேலும் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை” என்ற கேள்விக்கு அளித்த பதில் வருமாறு :

தி.மு.க.வை பொருத்தவரையில் தமிழ்நாட்டு மக்களை நாங்கள் நம்பினோம், பச்சை பாம்பு எது பச்சைக் கொடி எது என பொதுமக்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள் என நம்பினோம், அது தெரியாமல் ஒட்டு போட்டு விட்டார்கள் இப்போது வருந்துகிறார்கள்.

முடக்கப்படும் கருத்து சுதந்திரம்!

ஆட்சியில் இருக்கும் போது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பேச்சுரிமையை பாதிக்கக் கூடாது என்ற அடிப்படையில் நாங்கள் செய்தோம், ஆனால் தற்போது அது போன்று இல்லாத காரணத்தினால் நடவடிக்கை எடுக்கிறோம். தற்போதைய அரசு கருத்து சுதந்திரத்தை 100 சதவிகிதம் முடக்குகிறது. குறிப்பாக அரசியல் விமர்சகர் பொன்ராஜ் மீது இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் நிர்மல் குமார் மார்ச் மாதம் கொடுத்த புகாரை அமைச்சராக பொறுப்பேற்றவுடன் பொன்ராஜ் மீது வழக்குப் பதிவு செய்கிறார்கள், பதவி ஏற்ற இரண்டாவது நாளில் அந்த வேலையை ஆரம்பித்துள்ளார்கள். அரசு கருத்து சுதந்திரத்திற்கு 100% எதிராக நடக்கிறது என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை வருங்காலத்தில் இன்னும் நிறைய நடக்கும்.

தி.மு.க. சட்டத்துறை எதிர்க்கட்சியாக இருக்கும் பொழுது போட்ட வழக்குகளை ஜெயித்துள்ளோம். பல பேரை காப்பாற்றியுள்ளோம். ஆக எந்த சட்ட ரீதியான பிரச்சனை வந்தாலும் திமுக சட்டத்துறை எந்தக் காலத்திலும் வாதாடி வந்துள்ளது. அதே பணியை என்.ஆர்.இளங்கோ தலைமையில் தனி அணி அமைக்கப்பட்டு முன்பை காட்டிலும் வேகமாக செயல்பட தமிழ்நாடு முழுவதும் வழக்கறிஞர் அணி தயாராகிக் கொண்டிருக்கிறது.

இன்று காலை கழகத் தலைவர் அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கி மாநிலம் முழுவதும் மாவட்டம் தோறும் வழக்கறிஞர் அணி என்ன செய்ய வேண்டும், தகவல் தொழில் நுட்ப அணி என்ன செய்ய வேண்டும், எப்படி இணைந்து செயல்பட வேண்டும் என்ற வழிகாட்டு நெறிமுறையை வழங்கியுள்ளார்கள். அதன்படி இனிமேல் பொய் வழக்குகளை எதிர்த்து வாதாடுவதிலும் போராடுவதிலும் எங்கள் மீது அவதூறு கிளப்புவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் வழக்கறிஞர் அணி முழு வீச்சில் செயல்படும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவை கட்சி அலுவலகமாக தமிழக வெற்றிக் கழகம் பயன்படுத்தப்படுவது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அளித்த பதில் வருமாறு :-

தலைமைச் செயலகத்திற்கும் கட்சி அலுவலகத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை அது சட்டப்படி தவறு அது மட்டுமல்லாது அந்த அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று பேருக்கும் யார் யார் பணம் கொடுத்தார்கள், மாறுவதற்கு காரணம் என்ன, அனைத்தும் வெளிவரப் போகிறது. வெளிவரும்போது வாங்குபவர்கள் மட்டுமல்ல தண்டிக்கப்படுவார்கள் என்று இல்லை யார் பணம் கொடுத்தார்களோ காரணமாக இருந்தார்களோ அவர்களும் மாட்டுவார்கள். இது ஏற்கனவே நீதிமன்றங்களில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

“ஆயா ராம் காயாராம்” என்பது போன்று நடந்துள்ளது. அதாவது அரியானா சட்டமன்றத்தில் மூன்று நாட்களில் 15 முறை ஒரு உறுப்பினர் கட்சி மாறினார். சட்டசபை நடந்து கொண்டிருக்கும் பொழுது மூன்று மணி நேரத்திற்குள் கட்சி மாறினார். அதற்கு தான் ஆயா ராம் என்பதற்கு ராம் வந்தார் கயா ராம் என்றால் ராம் போனார் என்று சொல்லாடல் வந்தது.

சினிமா ஹீரோக்களைப் பார்த்து ஏமாந்தவர்கள்!

அதுபோல்தான் அ.தி.மு.க. எம். எல்.ஏ.க்கள் வந்தார்கள், போனார்கள். இன்றைய தலைமுறைக்கு ஹாய்யா ராம்கயாராம்என்பதைநினைவுபடுத்தும் வகையில் இந்த ஆட்சி நடைபெறுகிறது. பல வேடிக்கைகளை நாம் பார்க்க வேண்டி உள்ளது.

சினிமாவில் காமெடியன்களை பார்த்தோம், ஹீரோக்களைப் பார்த்து ஏமாந்தவர்கள். இனி தமிழ்நாட்டை காப்பாற்ற எங்களைத் தவிர வேறு வழி கிடையாது. எப்பொழுதெல்லாம் தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் ஆபத்து வருகிறதோ தோள் கொடுத்து 77 வருடமாக காப்பாற்றி வருகிறோம். நாங்கள் தொடர்ந்து காப்பாற்றுவோம்.

இவ்வாறு - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குறிப்பிட்டார்.

தூத்துக்குடி மாவட்டம் – விளாத்திகுளம் அருகே சிறுமி கடத்திக் கொலை!

குற்றவாளிக்கு இரட்டை தூக்குத் தண்டனை!

76 நாட்களில் தீர்ப்பு வழங்கிய தூத்துக்குடி போக்ஸோ நீதிமன்றம்!

தூத்துக்குடி, மே 27-

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த பிளஸ் டூ மாணவி, கடந்த மார்ச் மாதம் 10ஆம் தேதி மாலை தனது வீட்டில் இருந்து அருகேயுள்ள காட்டுப்பகுதிக்கு இயற்கை உபாதை கழிக்க சென்ற நிலையில் காணாமல் போனார். அடுத்த நாள் மார்ச் 11ஆம் தேதி காணாமல் போன மாணவி காட்டுப்பகுதியில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு அலங்கோலமான நிலையில் உடலில் காயங்களுடன் சடலமாக கிடப்பது தெரியவந்தது. தகவலறிந்த போலீசார் வேடநத்தம் கிராம காட்டுப்பகுதிக்கு வந்து மாணவியின் சடலத்தை கைப்பற்றி தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இக்கொடூர கொலை சம்பவத்தை கண்டு அதிர்ச்சியடைந்த வேடநத்தம் கிராம மக்கள், தூத்துக்குடி மதுரை தேசிய நெடுஞ்சாலையிலும், தூத்துக்குடி ராமேஸ்வரம் மாநில நெடுஞ்சாலையிலும் தொடர்ந்து 12 மணி நேரத்துக்கு மேலாக சாலை மறியல் போராட்டம் நடத்தினர். இந்நிலையில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக செயல்பட்ட மகளிர் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரவீனா மார்ச் 12ஆம் தேதி சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

இந்நிலையில் காற்றாலை கோபுர சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகி இருந்த காட்சிகள் மூலம் சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரனை போலீசார் மார்ச் 19ஆம் தேதி தூத்துக்குடியில் வைத்து கைது செய்தனர். குளத்தூர் காவல் நிலையத்தில் தர்ம முனீஸ்வரன் மீது வழக்குப்பதிவு செய்து, மார்ச் 20ஆம் தேதி காலை பலத்த பாதுகாப்புடன் வேடநத்தம் காட்டுப்பகுதிக்கு போலீசார் அவரை அழைத்து வந்து, சம்பவத்தை நடித்து காண்பிக்க வைத்து, அதை வீடியோவாக பதிவு செய்தனர்.

குற்றவாளி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மார்ச் 20ஆம் தேதி மாணவியின் குடும்பத்தினர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து அவரது சடலத்தை பெற்று 10 நாட்களுக்குப் பிறகு தகனம் செய்தனர்.

இச்சம்பவம் குறித்த வழக்கானது தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் போலீசார் விரைந்து செயல்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக பல்வேறு சாட்சிகளிடம் விசாரணை நடைபெற்றது. கடந்த 21ஆம் தேதி அனைத்து விசாரணை நடைமுறைகளும் முறைப்படி நிறைவடைந்ததை தொடர்ந்து, இந்த வழக்கில் மே 25ஆம் தேதி திங்கட் கிழமையான நேற்று முன்தினம் தூத்துக்குடி மாவட்ட போக்சோ நீதிமன்ற நீதிபதி பிரீத்தா தீர்ப்பு வழங்கினார்.

கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு என தூத்துக்குடி போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

விளாத்திகுளம் சம்பவத்தில் விரைந்து நீதியைப் பெற்றுத்தந்த காவல்துறை மற்றும்

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வரவேற்பு!

சென்னை, மே 27–

விரைந்து நீதியைப் பெற்றுத் தந்த காவல்துறை மற்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

விளாத்திகுளம் வேடநத்தம் அருகே பன்னிரண்டாம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி கொலை செய்யப்பட்ட வழக்கில், குற்ற வாளிக்கு நேற்று முன்தினம் தண்டனை வழங்கியுள்ளது தூத்துக்குடி போக்ஸோ நீதிமன்றம்.

பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்தினருடன் துணை நின்று, குற்றம் நடந்த 76 நாட்களில் இவ்வழக்கின் விசாரணையை விரைந்து நடத்தி முடித்து, நீதியைப் பெற்று தந்துள்ள முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கும் நன்றி.

குற்றவாளிக்கான தண்டனையை சட்டம் உறுதிசெய்துவிட்டது. இனி இதுபோல எந்தவொரு பெண்ணுக்கும் நடக்காதவாறு, கூட்டு மனசாட்சியோடு இயங்கும் இந்தச் சமூகம் தான் உறுதிசெய்யவேண்டும். அதற்கான வழிகளை அரசு தான் ஏற்படுத்தித் தரவேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மதுரை தெற்கு மாவட்ட

அவைத் தலைவர் டி.நாகராஜன் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

மதுரை, மே 27-

மதுரை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் டி.நாகராஜன் உடல் நலக் குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த மதுரை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் டி.நாகராஜன் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் கழகத் தோழர்களுக்கும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

கோவை மாவட்டம், சூலூர் பகுதியில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுமியின் குடும்பத்திற்கு சேலம் மத்திய மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன், சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வ கணபதி ஆகியோர் குடும்பத்தாரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி சிறுமியின் சொந்த கிராமமான சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே உள்ள உக்கம்பருத்தி காட்டிற்கு நேரில் சென்று சிறுமி படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாதிக்கப்பட்ட குடும்பத்தை சந்தித்து ஆறுதல் தெரிவிக்கக் கூறியதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு திமுக உறுதுணையாக இருக்கும் என்றும் குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் அதற்காக தமிழக அரசுக்கு தி.மு.க. அழுத்தம் கொடுக்கும் என்று சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி தெரிவித்தார்.